# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 17 செவ்வாய்க்கிழமை 02.09.2025 கதிர் 30



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




# வடக்கின் முதல் விதை தேங்காய் உற்பத்தி அலகு!

## ஜனாதிபதியின் தலைமையில் பளையில் இன்று திறப்பு



பளை, செப். 02

வடக்கு தெங்கு முக்கோண திட்டத்தின் கீழ், வடக்கின் முதல் விதைத் தேங்காய் உற்பத்தி அலகு இன்று காலை பளை நகரில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டம் இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுத் திட்டமாக செயற்படுத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளை வடக்கு தெங்கு முக்கோணமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதன்கீழ், 2025ஆம் ஆண்டுக்குள் வடக்கு மாகாணத்தில் 16 ஆயிரம் ஏக்கர் தேங்காய் பயிரிட எதிர்பார்க்கப்படுகின்றது. 2025 முதல் 2027 வரையிலான

7➤



## நீர் வீழ்ச்சியில் நீராடிய ஆசிரியர் சடலமாக மீட்பு!

வெலிமடை, செப். 02

வெலிமடை, போம்புருஎல்ல நீர் வீழ்ச்சியில் நீராடச் சென்ற ஆசிரியர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று இந்தச் ஆசிரியர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று ஊவா பரணகம அம்பகஸ்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை 8 பேர் கொண்ட ஆசிரியர் குழுவொன்று அந்தப்பகுதிக்குச் சுற்றுலா சென்றது. இதில் ஒருவர் நீராடிக் கொண்டிருந்த நிலையில் நீரில் அடித்துச் செல்லப்பட்டார். நீரில் அடித்துச் செல்லப்பட்ட ஆசிரியரை மற்றுமொரு ஆசிரியர் காப்பாற்ற முயற்சி செய்த போது அவர் காயங்களுக்குள்ளாகினார்.

காணாமல்போனவரைத் தேடும் பணியில் சுழியோடிகள் ஈடுபட்டனர். இந்தநிலையில் அவர் நேற்று திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்ட ஆசிரியர் 31 வயதுடைய உடப்புஸ்ஸலாவ பகுதியைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தந்தை ஆவார்.

இவர் உடப்புஸ்ஸலாவ டலோஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில்

7➤

# வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணி: இன்று ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி



முல்லைத்தீவு, செப். 02

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று நண்பகல் ஆரம்பித்து வைத்தார்.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருட காலம் பூர்த்தியாகும் நிலையில், முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களை ஆரம்பித்து வைக்க ஜனாதிபதி வடக்குக்கு விஜயம் செய்துள்ளார்.

மிகநீண்டகாலக்கோரிக்கையாக இருந்த வட்டுவாகல் பால நிர்வாகப் பணிகளை ஆரம்பிப்பதற்கு வருகை தந்திருந்த ஜனாதிபதியை, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமா மகேஸ்வரன் வரவேற்றார்.

தொடர்ந்து பால நிர்மாணப் பணிக்கான பெயர்ப்பலகையை ஜனாதிபதி திறந்து வைத்து மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், திலகநாதன், ஜெகதீஸ்வரன், ரவிகரன் மற்றும் மதகுருமார்கள், திணைக்களங்களின் அதிகாரிகள், தவிசாளர்கள், உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பதுளையில் எரிந்த நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்பு



பதுளை, செப். 02

பதுளை, பல்லேகெட்டுவ பொலிஸ் தோட்டப் பகுதியில் எரிந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

7➤

## தர்மலிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 02

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 40ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், தாவடியில்

7➤











## மருதனார்மடத்தில் கையெழுத்துப் போராட்டம்

மருதனார்மடம், செப். 02

தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப் போராட்டம் இன்று காலை 10 மணியளவில் யாழ். மருதனார்மடத்தில் நடைபெற்றது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா பிரகாஷ் தலைமையில் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்றலில் இந்தக் கையெழுத்துப் போராட்டம் நடைபெற்றது. இதில் பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

7➤



# மன்னார் வீரர்கள் இருவர், தேசிய உதைபந்தாட்ட அணிக்கு தெரிவு

மன்னாரு, செப் .02

இலங்கை16வயதுகீழ்உதைபந்தாட்ட தேசிய அணியில் மாணவர்களை உள்வாங்குவதற்கு நடைபெற்ற தேர்வில் மன்ஃபுனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் தெரிவாகி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான ே.கெஸ்ரோன் , மு.ஜெனிஸ்ரன் ஆகியோர் குறித்த தெரிவில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடி திறமையை வெளிப்படுத்தியதன் அடிப்படையில் தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

குறித்த இரு மாணவர்களும் கலந்து கொள்ளும் முதலாவது சர்வதேச உதைபந்தாட்ட போட்டியானது சீனாவில் இம் மாதம் 20ம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப் போட்டி " **U16 Tainyu Liufang Cup – 2025**" ற்கான போட்டியாகும். இதற்கான மேலதிக பயிற்சிகள் இம் மாதம் 4 ஆம் திகதி முதல் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம் மாணவர்கள் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் இருந்து தமது கல்வியை மேற்கொள்கின்றார்கள் என்பதன் அடிப்படையில் குறித்த மாணவர்களுக்கு உதவி செய்ய விரும்புவோர் அதிபர் ஊடாக உங்கள் உதவிகளை வழங்கி அந்த மாணவர்களின் திறமைக்கான அங்கீகாரம் பெறுவதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

இம் மாணவர்களின் மேலதிக பயிற்சிக்கான செலவையும், அவர்கள் சீனாவில் இருக்கும் போது ஏற்பட உள்ள மேலதிக செலவையும் தாங்கிக் கொள்வதற்கு பண வசதி இல்லாத சூழ்நிலையில் தற்போது இருக்கிறார்கள்.

எனவே இம் மாணவர்களை ஊக்கப்படுத்தி தேசிய மட்ட அணியில் ஒருவராக விளையாடுவதற்கு தங்களால் இயன்ற நிதி உதவியை வழங்கி உதவுமாறு பாடசாலை சமூகம் சார்பாக கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# பூண்டுலோயா விபத்தில் மாணவர்கள் உட்பட ஐவர் காயம்

*தலவாக்கலையில் இருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பேருந்து மற்றும் முச்சக்கர வண்டியொன்று பூண்டுலோயா கய்ப்புக்கொலை பகுதியில் வைத்து செவ்வாய்க்கிழமை (02) விபத்துக்குள்ளாகியுள்ளது*

*குறித்த பேருந்து முச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முற்பட்ட போது விபத்து ஏற்பட்டுள்ளதுடன் விபத்தின் போது பேருந்தில் பயணித்த பாடசாலை மாணவர்கள் நால்வர் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது.*

*காயமடைந்த 5 பேரும் கொத்மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (ஐ)*

# மஹிந்தவை சிறையில் அடைக்க வேண்டும்

கொழும்பு, செப் .02

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை 400 ஆண்டுகள் சிறையில் அடைக்க வேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.



நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், ராஜபக்சவின் 2010 ஆட்சிக் காலத்திலேயே கடுமையான ஊழல்கள் இடம்பெற்றதாக குறிப்பிட்டுள்ளார்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அடுத்தடுத்து வந்த இலங்கைத் தலைவர்களையும் விமர்சித்துள்ளார்.

அவர்களுக்கு தேசிய வளர்ச்சிக்கான தொலைநோக்குப் பார்வை இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கைகளையும் சரத் பொன்சேகா விமர்சித்துள்ளார். அவருடைய கைது விடயத்தில் நடப்பு அரசாங்கம் மேற்கொண்ட முன்னுதாரணத்தை தாம் ஏற்றுக்கொள்வதாக பொன்சேகா கூறியுள்ளார்.

அந்த முன்னுதாரணத்தின் அடிப்படையில், ராஜபக்ஷ போன்ற ஒருவருக்கு சுமார் 400 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று சரத்பொன்சேகா வலியுறுத்தியுள்ளார். (ஐ)



# ஜனாதிபதியின் செயலால் மக்கள் அதிருப்தி!

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இனவாதமாக செயற்படும் தையிட்டி விகாரதிபதியிடம் ஆசிர்வாதம் வாங்கியமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். மண்டைதீவில் நேற்றையதினம் இடம்பெற்ற சர்வதேச துடுப்பாட்ட மைதானத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் சர்வமத தலைவர்கள் வரிசையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியும் கலந்து கொண்டார்.

இதன்போது ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அவரிடம் ஆசீர்வாதம் வாங்கினார்.

வடக்கில் வந்து இனவாதம் வேண்டாம் என பேசும் ஜனாதிபதியின் இந்த செயல் குறித்து தமிழர்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

தையிட்டி விகாரைக்கு எதிராக காணி உரிமையாளர்கள் போராட்டம் நடாத்தி வரும் நிலையில், அது தொடர்பில் கவனம் கொள்ளாது, ஜனாதிபதி செயற்பட்டமை காணி உரிமையாளர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போது தையிட்டி விவகாரம்தொடர்பில்பேசப்பட்டது. இதன்போது எதுவித பதிலும் பேசாது மௌனமாக இருந்த ஜனாதிபதி, விகாரைக்கு மாற்றுக் காணிகளை வழங்க துணை போகிறாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மக்கள்காணிமக்களுக்கேஎன்றும்அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும் என்றும் பேசும் ஜனாதிபதி, அது தொடர்பில் உண்மையாகவே செயற்படுகிறாரா என காணி உரிமையாளர்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

(ஐ)

# தமக்கு தெரிந்தே பல கொலைகள் நடாத்தப்பட்டது கைது செய்யப்பட்ட குற்றக்கும்பல் வாக்கு மூலம்!

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் சமீபத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் இந்த நாட்டிற்கு அழைத்து வரப்பட்ட கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட பாதாள உலகக் குழுவினரிடம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளில் இருந்து பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை பொலிஸார், இந்தோனேசியாவின் ஜகார்த்தா பொலிஸார் மற்றும் சர்வதேச பொலிஸார் இணைந்துநடத்திய கூட்டுநடவடிக்கையில்அண்மையில் கைது செய்யப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களான கெஹல்பத்தர பத்மே, கமாண்டோ சலிந்த, பெக்கோ சமன் உள்ளிட்டோர் தற்போது 72 மணி நேர தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

அவர்களில் கெஹல்பத்தர பத்மே என்ற மந்தினு பத்மசிறி பெரேரா, பாணந்துரை நிலங்க என்ற நிலங்க சம்பத் சில்வா, கமாண்டோ சலிந்த என்ற சலிந்த மதுஷான் பெரேரா ஆகியோர் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தெம்பிலி லஹிரு என்ற லஹிரு மதுசங்க மற்றும் பெக்கோ சமன் என்ற என்.என். பிரசங்க ஆகியோர் மேல் மாகாண வடக்கு குற்ற விசாரணை பிரிவின் பொறுப்பில் கொழும்பு துறைமுக பொலிஸ் நிலையத்தில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவிடம் இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில்,

மித்தெனிய - கண்டேவத்தை பகுதியில் மூவர் கொலை செய்யப்பட்டமை மற்றும் மித்தெனிய - தொரகொலயாய பகுதியில் இரண்டு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமும் தங்களுக்குத் தெரிந்தே நடத்தப்பட்டதாக அவர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

# நன்னீர் குழாய்களை அமைக்க அகழப்பட்ட குடியிருப்பு வீதிகள் பல காலங்களாக மூடப்படவில்லை



வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் தாளையடி நன்னீர் திட்ட நிறுவன அதிகாரிகளுக்கும் பிரதேச மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் தாளையடி நன்னீர் திட்ட நிறுவனம் வீதிகளை அகழ்ந்து நன்னீர் குழாய்களை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் குடியிருப்பு பகுதிகள் காணப்படும் வீதிகளுக்கு அருகில் வீதிகளைக் அகழ்ந்து குழாய்களை அமைத்து வருகின்றனர்.

குழாய்களை அமைத்த பின் குறித்த வீதிகளை புனர்நிர்மானம் செய்யாமல் அலட்சியமாக விட்டு செல்கின்றனர். இதனால் மருதங்கேணி உள்ளக வீதிகள் பெரும் சேதத்துக்குள்ளாகி பயணிக்க முடியாத நிலையில் உள்ளது

கனரக வாகனங்கள் உள்வீதியால் பயணிக்க தடை காணப்படுகின்ற வேளையிலும் கனரக வாகனங்களை உள்வீதி ஊடாக கொண்டு வந்து வீதிகளை சேதப்படுத்தியுள்ளனர்.

உரிய முறையில் மருதங்கேணி பிரதேச மக்களால் நன்னீர் திட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் கடந்த ஆறு மாதங்களாக பொய் வாக்குறுதிகளை கொடுத்து மக்களை ஏமாற்றி வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

மக்களின் கோரிக்கையை அலட்சியப்படுத்தி விட்டு நன்னீர் திட்ட அதிகாரிகள் ஏனைய பகுதியில் தமது வேலையை முன்னெடுத்துக் கொண்டிருந்த வேளையே இளைஞர்கள் குவிந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சம்பவத்தையடுத்து அப்பகுதிக்கு விரைந்த தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினரும், தாளையடி நன்னீர் திட்ட மக்கள் தொடர்பாடல் அதிகாரியுமான பரிதா, தான் தோன்றித்தனமாக பதில் அளித்ததால் இளைஞர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டு மேல் அதிகாரியை அழைத்தனர்.

குறித்த இடத்திற்கு சென்ற மேலதிக அதிகாரி ஒருவர், இன்று உரிய பதிலை வழங்குவதாக கூறிவிட்டு அனைத்துப் பணிகளையும் நிறுத்திவிட்டுச் சென்றனர்.

அங்கு சென்றிருந்து பருத்தித்துறை பிரதேச சபையின் தமிழரசு கட்சி உறுப்பினர் வேலாயுதம் சசிகாந்த் குறித்த வீதியை பார்வையிட்டதுடன் குறித்த வீதி மிகப் படுமோசமான முறையில் காணப்படுவதாக தெரிவித்தார் .(ஐ)

# கைதாவதை தடுக்கக் கோரி கம்மன்பில தாய்லாந்திலிருந்து மனு தாக்கல்

கொழும்பு, செப் .02

தற்போது தாய்லாந்தில் இருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, தாம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்படுவதைத் தடுக்க உத்தரவிடக் கோரி தமது சட்டத்தரணி மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்டமை தொடர்பாக ஊடக சந்திப்பொன்றில் கருத்தொன்றை தெரிவித்திருந்தார்.

அரசியலமைப்பின் 14(1) பிரிவின் கீழ் இது பேச்சுச் சுதந்திரமாக இருந்தாலும், அந்த உரை சமூக பிரிவினை மற்றும் இனவாதத்தை தூண்டும் வகையில் இருந்ததாகக் கூறி சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை சட்டத்தின் 3(1) பிரிவு மற்றும் குற்றவியல் சட்டத்தின் 120ஆம் பிரிவு கீழ் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், விசாரணையின்றி தன்னைத் தடுத்து வைக்க சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது கருத்துக்கள் எந்தவொரு இனக்குழுவையும் இலக்கு வைக்கவில்லை என்றும் விடுதலைப் புலிகளை குறிவைத்து தெரிவிக்கப்பட்டது என்றும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமது கருத்துகள் தொடர்பான குற்றப்புலனாய்வு திணைக்கள விசாரணைகள் அரசியல் பழிவாங்கலுக்கு சமமானது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ஐ)

# காலிமுகத்திடல் பகுதியில் போக்குவரத்துக்கு பாதிப்பு

கொழும்பு, செப் .02

ஓய்வுபெற்ற அரச அதிகாரிகள் முன்னெடுத்துள்ள போராட்டம் காரணமாக ஜனாதிபதி செயலகத்திற்கு அருகிலுள்ள ஒருவழிப் பாதையின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இன்று (2) முற்பகல் முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தப் போராட்டம் காரணமாக காலி முகத்திடலில் இருந்து கொள்ளுப்பிட்டி நோக்கிச் செல்லும் வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக 'அத தெரண' செய்தியாளர் தெரிவித்தார்.

இந்நிலையில், பேராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் ஆறு பேருக்கு ஜனாதிபதி செயலகத்தில் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக 'அத தெரண' செய்தியாளர் குறிப்பிட்டார். (ஐ)

# இலஞ்சம் பெற்ற 49 பேர் கைது

கொழும்பு, செப் .02

இந்த ஆண்டின் முதல் 7 மாதங்களில் இலஞ்ச பெறப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த காலகட்டத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு 3,937 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதன் அடிப்படையில் 72 சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்ட நிலையில் அவற்றில் 39 சுற்றிவளைப்புகள் வெற்றியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிகளவில் இலஞ்சம் பெற்ற சம்பவங்கள் பொலிஸ் திணைக்களத்தில் பதிவானதுடன், இதுவரை 17 பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. நீதி அமைச்சு, சுகாதார அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் பிரதேச செயலகங்கள் போன்ற அரச நிறுவனங்களில் கடமையாற்றியவர்களும் அவர்களில் அடங்குவதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் கடந்த காலங்களில் இலஞ்ச வழக்குகள் தொடர்பாக 27 நபர்களை நீதிமன்றங்கள் குற்றவாளிகளாக அடையாளம் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எடப்பாடிக்கு புதிய நெருக்கடி: சசிகலா, ஓ.பி.எஸ்.ஐ சேர்க்க செங்கோட்டையன் வலியுறுத்தல்?



வரும் 5ம் தேதி மனம் திறக்கும் செங்கோட்டையன் ஒருங்கிணைந்த அதிமுகவை வலியுறுத்துவார் என்று தகவல் வெளியாகியுள்ளது. பழனிசாமிக்கு விவசாயிகள் நடத்திய பாராட்டு விழாவில் ஜெயலலிதா படம் இடம்பெறவில்லை என குற்றம் சாட்டினார் செங்கோட்டையன். பிப்ரவரியில் நடந்த பாராட்டு விழாவில் எம்ஜிஆர், ஜெயலலிதா படம் இடம்பெறவில்லை என செங்கோட்டையன் குற்றம் சாட்டினார். எடப்பாடிக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய செங்கோட்டையன் டெல்லி சென்று பாஜக தலைவர்களை சந்தித்தது பரபரப்பை ஏற்படுத்தியது. டெல்லி சென்று வந்த பிறகு செங்கோட்டையன் அமைதி காத்து வந்தார்

மீண்டும் அதிருப்தியை பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ள செங்கோட்டையன் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு தயாராவதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. செங்கோட்டையன் போர்க்கொடியால் அதிமுகவில் எடப்பாடிக்கு புதிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கோபிச்செட்டிபாளையம் அதிமுக அலுவலகத்தில் ஆதரவாளர்களுடன் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் ஆலோசனை நடத்தினார். செங்கோட்டையன் நடத்தும் ஆலோசனையில் பவானிசாகர் தொகுதி எம்.எல்.ஏ.பண்ணாரியும் பங்கேற்றுள்ளார். 5ம் தேதி மனம் திறந்து பேசப் போவதாக அறிவித்துள்ள செங்கோட்டையன் ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்துவதால் அதிமுக வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

வரும் 5ம் தேதி மனம் திறக்கும் செங்கோட்டையன் ஒருங்கிணைந்த அதிமுகவை வலியுறுத்துவார் என்று தகவல் வெளியாகியுள்ளது. சசிகலா, ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோரை மீண்டும் அதிமுகவில் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்த செங்கோட்டையன் திட்டமிட்டுள்ளார். (ஐ)

## டெல்லியில் கனமழை காரணமாக யமுனை நதியில் வெள்ளப்பெருக்கு



வடமாநிலங்களில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில் தலைநகர் டெல்லியில் நேற்று இரவு முழுவதும் பெய்த கனமழை காரணமாக யமுனை நதியின் நீர்மட்டம் உயர்ந்தது. மேலும் டெல்லி-என்சிஆரில் உள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்தது.

குறிப்பாக டெல்லி-குருகிராம் எல்லையில், நீர்மட்டம் அதிகரிப்பதால் அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. நேற்று முதல் மழை தொடர்ந்து பெய்து வருவதால் யமுனை நதியின் நீர்மட்டம் இன்று காலை அபாய அளவைத் தாண்டியது. இதனால் யமுனை நதியின் கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தி வருகின்றனர். யமுனை உட்பட சில ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்ததால், யமுனாநகர் மாவட்டத்தில் உள்ள ஹத்னிகுண்ட் தடுப்பணையின் மதகுகளை அதிகாரிகள் திறக்க தொடங்கினர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதிப்பு ஏற்படக்கூடிய சில பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. கனமழை காரணமாக டெல்லி-ஜெய்ப்பூர் நெடுஞ்சாலையில் நேற்று 7-8 கி.மீ. நீளத்திற்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. குருகிராமில் பெய்த கனமழையால் மக்கள் 3 மணி நேரத்திற்கும் மேலாக சிக்கித் தவித்தனர். யமுனை நதியில் தொடர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வருவதால், பழைய ரயில் பாலத்தில் இன்று மாலை 5 மணி முதல் போக்குவரத்து நிறுத்தப்படும் என்று டெல்லி பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

வெள்ள அச்சுறுத்தலுக்கு மத்தியில், முதலமைச்சர் ரேகா குப்தா மக்கள் பீதி அடைய வேண்டாம் என்று வலியுறுத்திள்ளார். இந்நிலையில் யமுனை நதியின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் வயல்களில் சிக்கித் தவிக்கும் விவசாயிகளை மீட்கும் நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மீட்புக் குழுவை சேர்ந்த ஒருவர் கூறுகையில், ஹத்னிகுண்ட் தடுப்பணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் தற்போது நிலைமை மோசமாகி உள்ளது. நேற்று இரவு முதல் மக்களை மீட்டு வருகிறோம். மக்களை பாதுகாப்பாக மீட்டுள்ளோம்.

நேற்று இரவு முதல் 50-60 பேரை மீட்டுள்ளோம். சிக்கித் தவிக்கும் கால்நடைகளையும் மீட்டு வருகிறோம். இந்த படகுகள் டெல்லி அரசின் சார்பாக இயக்கப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார்.

(ஐ)

## அம்பானிக்காகவே ரஷ்யாவுடன் மோடி வர்த்தக உறவு: திருமாவளவன் குற்றச்சாட்டு



அம்பானிக்காகத்தான் பிரதமர் மோடி, ரஷ்யாவுடன் உறவை தொடர்வதாக விசிக தலைவர் திருமாவளவன் குற்றச்சாட்டியுள்ளார். கச்சா எண்ணெயை ரஷ்யாவிடம் அம்பானி நிறுவனம் வாங்க அமைச்சர் ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு ரஷ்யாவிடம் இருந்து குறைந்த விலைக்கு அம்பானி கச்சா எண்ணெய் வாங்கினார். கச்சா எண்ணெயை சுத்திகரித்து அதனை ஐரோப்பிய நாடுகளுக்கு அம்பானி விற்கிறார். இதனால் ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது என்று டிரம்ப் வலியுறுத்தி கேட்காததால் இந்தியாவுக்கு 50மூ வரி விதிக்கப்பட்டது என அவர் தெரிவித்தார். (ஐ)

## திருப்பூரில் ஒன்றிய அரசை கண்டித்து போராட்டம்



திருப்பூரில் ஒன்றிய அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போராட்டம் நடைபெற்று வருகிறது. அமெரிக்க வரி விதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள திருப்பூர் ஆயத்த ஆடைத் துறையை பாதுகாக்க தவறிய ஒன்றிய பாஜக அரசை கண்டித்து திருப்பூரில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது. திமுக துணைப்பொதுச்செயலாளர் ஆ.ராசா , திமுக மேற்கு மண்டல பொறுப்பாளர் செந்தில் பாலாஜி , திராவிடர் கழக தலைவர் துணைத்தலைவர் கலி. பூங்குன்றன , மதிமுக பொதுச்செயலாளர் வைகோ , மனிதநேய மக்கள் கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா,, மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் மு.தமிமுன் அன்சாரி , இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சுப்பராயன் , மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சு.வெங்கடேசன் , விடுதலை சிறுத்திகள் கட்சி தலைவர் தோல். திருமாவளவன் , தந்தை பெரியார் திராவிட கழக பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன், ஆதித்தமிழர் பேரவை நிறுவன தலைவர் இரா. அதியமான், காங்கிர கமிட்டி முன்னாள் தலைவர் கே.வி தங்கபாலு உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

(ஐ)

# அடையாள அரசியல்: சாதகமா? பாதகமா?

–தீபிகா தீனதயாளன்



அடையாள அரசியல் என்பது இனம், தேசியம், மதம், பாலினம், சமூகப் பின்னணி, சாதி மற்றும் வர்க்கம் போன்ற ஒரு குறிப்பிட்ட அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் அரசியலாகும். இது குறித்து இங்கு பல கருத்துகள் நிலவுகின்றன. சிலர் அடையாள அரசியல் ஆரோக்கியமானது என்று சொல்வர். சிலர் அது முற்றிலும் தவறு என்பர். இன்னும் சிலர் இடம், பொருள், ஏவல் கருதி அடையாள அரசியல் செய்யலாம் என்பர். இந்தக் கட்டுரையில் அடையாள அரசியல் குறித்து வெவ்வேறு அரசியல்கொள்கை கொண்டு செயல்படுபவர்கள் எவ்வாறு எண்ணுகிறார்கள் என்று விரிவாகக் காணலாம்.

அரசியல் கொள்கைகளை ஒரு நேர்க்கோட்டில் வைத்தால், தீவிர இடது, தீவிர வலது, மிதவாத இடது, மிதவாத வலது, நடுநிலை என்று பிரிக்கப்படுகின்றன. இவ்வாறு அரசியல் நிலைப்பாடுகள் வகைப்படுத்துவதை அரசியல் ஸ்பெக்ட்ரம் என்பர். மேல் குறிப்பிட்ட ஒவ்வோர் அரசியல் கொள்கையைச் சார்ந்து பேசுபவர்களும்அடையாளம்குறித்தும்அடையாள அரசியல் குறித்தும் வெவ்வேறு புரிதல் கொண்டு செயல்படுவார்கள். பொதுவாக, தீவிர வலதும் தீவிர இடதும் முற்றிலும் எதிர் கொள்கைகள் என்று கூறப்படுகிறது. உதாரணத்திற்கு, தீவிர வலது முதலாளித்துவம் மற்றும் தனியார்மயமாக்கலை ஆதரித்தால், தீவிர வலது பொதுவுடைமை மற்றும் அரசுடைமையை ஆதரிக்கும். இவ்வாறு எதிர் எதிர் துருவங்களாக இருக்கும் தீவிர வலதும் தீவிர இடதும் அடையாள அரசியல் குறித்தும் முற்றிலும் மாறுபட்ட நிலைப்பாட்டுடன் இருக்கின்றனவா?

முதலில் அடையாள அரசியல் செய்வதன் மூலம் என்னென்ன சாதக பாதகங்கள் நிகழக்கூடும். அரசியல் என்பது நாம் நம் உரிமைகளைப் பெற உதவும் கருவி என்றால், அடையாள அரசியல் என்பது நாம் எந்த அடையாளத்தை வைத்து ஒடுக்கப்பட்டு நம் உரிமைகளை இழந்தோமோ அந்த அடையாளத்தை முன்னிறுத்தி போராடி, இழந்த உரிமையைப்பெற உதவும்கருவியாகிறது.



ஒடுக்கப்படுபவர்கள் ஓர் அடையாளம் கொண்டு ஒன்று சேர்ந்து போராட அடையாளம் உதவும் என்றால், அடையாள அரசியல் செய்வது நன்மை தானே என்று தோன்றலாம். ஆனால், இதில் ஒரு சிக்கல் இருக்கிறது.

இந்தியச் சமுதாயத்தில் பெரும்பான்மையான மக்கள் ஏதோ ஓர் அடையாளம் மூலம் ஒடுக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, இந்தியாவின் முதல் குடிமகள் என்று கூறப்படும் இந்திய ஜனாதிபதியாகவே இருந்தாலும், அவர் பழங்குடி இனத்தைச் சார்ந்தவராக, அதிலும் பெண்ணாக இருப்பதினாலேயே திரௌபதி முர்மு பலமுறை முக்கிய அரசு நிகழ்வுகளுக்கு அழைக்கப்படாமலும் கோயில் போன்ற பொது இடங்களுக்குள் நுழைய விடாமலும் அவமானப்படுத்தப்பட்டு ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டார். இந்திய ஜனாதிபதிக்கே இந்த நிலை என்றால் எந்த அதிகாரமும் இன்றி வாழும் சாதாரணக் குடிமக்களுக்கு இன்னும் பல அடையாளங்கள் கொண்டு பல அடுக்குகளில் ஒடுக்குமுறைகள் தினம் தினம் நிகழ்கின்றன.

இங்கு அரசியல் பேசும் அனைவரும் எல்லா வகையான ஒடுக்குமுறைகளை எதிர்த்தும் போராட வேண்டும் என்பதை ஒத்துக்கொள்வர். ஆனால், எப்படிப் போராட வேண்டும் என்பதில்தான் இங்கு வெவ்வேறு அரசியல் கொள்கைகள் பேசுபவர்கள் மத்தியில் வேறுபாடு வருகிறது. இவ்வாறு பல அடுக்குகளில் பல அடையாளங்கள் அடிப்படையில் ஒடுக்குமுறைகள் நிகழும் போது, எந்த அடையாளம் முன்னிறுத்தி நான் போராட வேண்டும் என்கிற குழப்பம் வரலாம். ஒருவேளை நான் எந்த அடையாளம் கொண்டு மிக அதிகமாக ஒடுக்கப்பட்டு மிகுந்த வாழ்வியல் பிரச்னைகளைச் சந்திக்கிறேனோ, அந்த அடையாளம் முன்னிறுத்திப் போராடித் தீர்வு காண முற்படலாம். ஒரே நேரத்தில் இரண்டு அல்லது மூன்றுக்கும் அதிகமான அடையாளங்களால் மிக தீவிரமாக ஒடுக்கப்பட்டால், எந்த அடையாளம் முன்னிறுத்தி எந்த அமைப்போடு சேர்ந்து போராடினால் எனக்குத் தீர்வு



விரைவாகக் கிடைக்கும் என்று தடுமாற நேரிடலாம். எனவே, எந்த நேரத்தில், எந்தப் பிரச்னைக்கு, எந்த அடையாளத்தை முன்னிறுத்தி, எந்த அமைப்போடு சேர்ந்து போராட வேண்டும் என்கிற தெளிவு நம் போராட்டம் வெற்றிகரமாக முடிவடையச்செய்ய அவசியமாகிறது.

இப்போது, தீவிர இடது அடையாளம் குறித்து என்ன சொல்கிறது என்று பார்ப்போம். தீவிர இடது சாரிகள் நம் சமூதாயத்தில் நிலவும் அனைத்து வகையான ஒடுக்குமுறைகளுக்கும் மூலக் காரணம் தனிச சொத்துடைமையும் முதலாளித்துவமும்தான் என்கிற நிதர்சனத்தை அடித்தளமாகக் கொண்டு ஒவ்வொரு சமுதாய பிரச்னையையும் அணுகுவார்கள். முதலாளித்துவத்தை முற்றிலும் ஒழிக்கத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடி, புரட்சி வெடிக்கச் செய்து, இப்போது இருக்கும் முதலாளித்துவ அமைப்பை முற்றிலும் வேர் அறுத்து, பாட்டாளி வர்க்க ஆட்சியை அமல்படுத்த வேண்டும் என்று நம்புவார்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சியே சமத்துவமான சமுதாயத்தைப் படைக்க நமக்கு இருக்கும் ஒரே கருவி என்று கூறுவார்கள். எனவே, பாட்டாளி என்கிற ஒற்றை அடையாளம் கொண்டு நாம் அனைவரும் ஒடுக்கப்படுகிறோம் என்பதை உணர்ந்து, நம் மற்ற அடையாளங்களை எல்லாம் களைந்து போராட வேண்டுமே தவிர, நாம் தனித்தனியாக சாதி, மதம், பாலினம் போன்ற அடையாளங்களாகப் பிரிந்து அந்தந்த அடையாளங்கள் மூலம் நிகழும் ஒடுக்குமுறைகளை மட்டும் எதிர்த்துப் போராடுவது நம்மை பாட்டாளிகளாக ஒன்றிணைய விடாமல் தடுக்கிறது என்று கருதுகிறார்கள்.

உதாரணத்திற்கு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பழங்குடி பெண்ணாக இருப்பதால், அவர் பழங்குடி இனத்தவர் உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் அமைப்புகளோடு சேர்ந்து போராடுவார் என்று கருதி, பெண்ணிய அமைப்புகள் விலகி நின்றுவிட்டால் மீண்டும் முர்முவின் குரல் போராட்டக் களத்தில்கூடத் தனிமைப் படுத்தப்படும். அடையாள அரசியலை மேலோட்டமாக அணுகும் போது, காணப படும் பாதகங்களில் ஒன்று, இவ்வாறு தனி தனி அடையாளங்களாகப் பிரிந்தே இருந்து சமூகப் படிநிலையை அப்படியே நீடிக்கச் செய்தல். இந்தப் பாதகத்தைத் தவிர்க்க ஒடுக்குமுறைகள் எதுவாக இருந்தாலும் ஒட்டுமொத்த சமூகமும் அனைத்துவகையான சுரண்டல்களில் இருந்தும் விடுதலைப் பெற்று நாம் அனைவரும் சமமாக வாழத் தோழமை உணர்வோடு ஒன்று சேர்ந்து போராட வேண்டும்.

எனவே, வர்க்கப் பார்வையோடு அந்த அந்தச் சூழல் தேவை கருதி அந்த அந்த அடையாளங்களை முன்னிறுத்தி தோழமையுடன் அனைவரும் ஒன்றிணைத்து அடையாள அரசியல், அதாவது அடையாளங்கள் மத்தியில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து அரசியல் செய்ய வேண்டும் என்று தீவிர இடதுசாரி தத்துவம் பேசுவோர் தொடர்ந்து பரப்புரைச் செய்துவருகிறார்கள். போராடுவதே அடையாள அரசியலின் முதன்மை நோக்கமாக இருக்கும் பட்சத்தில், தத்துவமாகவே போராட்டத்தை எதிர்க்கும் தீவிர வலதுசாரிகளும் அடையாள அரசியலை ஆதரிக்கிறார்கள். ஏன்?

முதலில் தீவிர வலதுசாரிகளின் சமூக அரசியல் பார்வை என்ன என்று ஆராய்வோம். வலதுசாரிகள், இந்தச் சமூகக் கட்டமைப்பு இப்போது இருப்பது போலவே பல படிநிலைகளில் ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூகமாகவே இருக்க வேண்டும் என்று எண்ணுவார்கள் மாற்றத்தை விரும்பாதவர்கள் பழமைவாதம் பேசுவார்கள். இந்த ஜென்மத்தில் நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு முன் ஜென்மத்தில் நாம் செய்த பாவம்தான் காரணம். நம் கையில் எதுவும் இல்லை. போராடினாலும் பிரயோஜனம் இல்லை. எனவே, கடவுளைச் சரணாகதி அடைந்து நம் துன்பங்கள் மாற வேண்டி பிரார்த்தனை செய்வதுதான் தீர்வு என்று கூறுவார்கள். பெரும்பான்மையான வலதுசாரிகள் சமூகப்படி நிலையில் மேல் அடுக்குகளில் இருக்கும் முன்னேறிய வகுப்பினராக இருப்பர். எனவே, மேல் நிலையில் இருந்து அனைத்து வகையான செல்வங்கள் மற்றும் சகல சௌகர்யங்களையும் தாங்கள் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்கிற மனநிலையில் இருக்கும் முன்னேறிய வகுப்பினர்கள் தீவிர வலதுசாரிகளாக இருக்கிறார்கள்.

எனவே, மக்களைச் சுரண்டிப் பிழைப்பதற்காகப் பல அடையாளங்கள் கற்பித்து சமூக அடுக்குகள் உருவாக்கி மக்களைத் தனித் தனியே பிரித்து அவர்களுக்குள் மேல் கீழ்

(7ஆம் பக்கம் பார்க்க..)

# சூடான் மலைப்பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் ஒரு கிராமமே அழிந்தது: 1000 க்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழப்பு



ஆப்ரிக்க நாடான சூடானின் மாரா என்ற மலைப்பகுதியில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 1000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். நிலச்சரிவில் அழிந்த கிராமத்தில் இருந்து ஒரே ஒருவர் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். மேற்கு சூடானில் ஆகஸ்ட் 31-ஆம் தேதி கொட்டிய பெருமழையால் நிலச்சரிவு ஏற்பட்டது. உள்நாட்டு போரால் சீரழிந்துள்ள சூடானில் இயற்கை பேரழிவால் மக்கள் பெருந்துயரம் அடைந்துள்ளனர்.

மீட்பு பணிகளை மேற்கொள்ள ஐ.நா., சர்வதேச தொண்டு நிறுவனம் உதவ வேண்டும் என சூடான் விடுதலை இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. சூடானில் உள்நாட்டு போர் நடந்துவரும் நிலையில் மக்கள் மாரா பகுதியில் தஞ்சமடைந்திருந்த நிலையில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. (ஐ)

## போர் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம் பிரான்ஸ் மருத்துவமனைகளுக்கு உத்தரவு







போர் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம் என்ற அச்சம் காரணமாக, தயாராக இருக்குமாறு பிரான்ஸ் முழுவதிலுமுள்ளமருத்துவமனைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐரோப்பா கண்டத்தில் எப்போது வேண்டுமானாலும் போர் வெடிக்கலாம் என்ற அச்சம் உருவாகியுள்ளது.

அடுத்த மாதம், அதாவது, செப்டம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் 16ஆம் திகதிவரை, பெலாரஸ் நாட்டில் ரஷ்ய படைவீரர்களும் பெலாரஸ் வீரர்களும் இணைந்து பிரம்மாண்ட போர்ப்பயிற்சி ஒன்றில் ஈடுபட இருக்கிறார்கள்.

இந்நிலையில், போர்ப்பயிற்சி என்னும் பெயரில் ரஷ்யா தாக்குதல் நடத்தக்கூடும் என்றும், ஆகவே, நாமும் தயாராக இருக்கவேண்டும் என்றும் ஜேர்மன் பாதுகாப்புத்துறைத் தலைவரான ஊயசளவநெ டீசநரநச எச்சரித்துள்ளார்.

இப்படிப்பட்ட ஒரு சூழலில்தான், பிரான்ஸ் முழுவதிலுமுள்ள மருத்துவமனைகள் தயாராக இருக்குமாறு பிரான்ஸ் சுகாதார அமைச்சகம் உத்தரவிட்டுள்ளதாக பிரான்ஸ் ஊடகமான **Le Canard Enchaîné** தெரிவித்துள்ளது.

2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் வாக்கில், பெரியதொரு போரின் விளைவாக, ஐரோப்பா முழுவதிலுமிருந்து வரும் காயம்பட்ட போர்வீரர்களுக்கு சிகிச்சையளிக்க பிரான்ஸ் முழுவதிலுமுள்ள மருத்துவமனைகள் தயாராக இருக்கவேண்டும் என்றும் பிரான்ஸ் சுகாதார அமைச்சகம் உத்தரவிட்டுள்ளதற்கு ஆதாரமான ஆவணங்களையும் **Le Canard Enchaîné** ஊடகம் வெளியிட்டுள்ளது.

ஆக, போர் வெடிக்கும்போது, பிரான்ஸ் தன் நாட்டு போர்வீரர்களுக்கு மட்டுமின்றி, ஐரோப்பா முழுவதிலுமுள்ள கூட்டாளர் நாடுகளின் போர்வீரர்களுக்கும் சிகிச்சையளிக்கும் மருத்துவ மையமாக செயல்படலாம் என்பதற்காக தற்போதே நடவடிக்கைகள் துவக்கப்பட்டுவருவதால், போர் குறித்த தகவல்கள் உறுதிசெய்யப்பட்டு வருவதாகவும் அச்சம் உருவாகியுள்ளது எனலாம். (ஐ)

## தினமும் விமானத்தில் பள்ளிக்குச் செல்லும் கனேடிய சிறுவர்கள்




பலருக்கு இன்றும் விமானத்தில் பயணிப்பது என்பது கொஞ்சம் பயத்தை ஏற்படுத்தும் விடயம்தான்.

ஆனால், எனக்கு பயமே இல்லை என்கிறான், முதல் நாள் பள்ளிக்குச் செல்லும் கனேடிய சிறுவன் ஒருவன்.

கனடாவின் கியூபெக் நகரிலிருந்து கிழக்கே, 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது **Isle-aux-Grues** என்னும் தீவு. ஆறு வயதுச் சிறுவனான **Matéo Andermann-Tessier**இடம் உனக்கு விமானத்தில் பறப்பது பயமாக இல்லையா என்றால், இல்லை எனக்கு பழகிவிட்டது என்கிறான் அவன்.

**Isle-aux-Grues** என்னும் தீவில் 122 பேர் மட்டுமே வசிக்கிறார்கள். அங்கிருந்த பள்ளி 1999ஆம் ஆண்டு மூடப்பட்டுவிட்ட நிலையில், அங்குள்ள பிள்ளைகளுக்கு விமானத்தில் சென்று படிப்பதைத்தவிர வேறு வழி இல்லை.

**Matéo**வின் பெற்றோர் இருவருமே படகு ஒன்றின் கேப்டன்களாக இருக்கிறார்கள். ஆனால், குளிர்காலத்தில் தண்ணீர் உறைந்துவிடும், கோடைகாலத்திலும் படகுப் பயணம் அபாயகரமானது என்பதால் தங்கள் பிள்ளையை விமானத்தில் அனுப்பவே அவர்களும் விரும்புகிறார்கள்.

ஆக, **Matéo**வுடன் மேலும் ஐந்து மாணவர்களும் தினமும் விமானத்தில்தான் பள்ளிக்குச் செல்லவேண்டிய நிலை உள்ளது. (ஐ)

## பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் மற்றுமொரு ஐரோப்பிய நாடு – இஸ்ரேல் மீது 12 தடை

பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க போவதாக மற்றுமொரு ஐரோப்பிய நாடு அறிவித்துள்ளது. பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க போவதாக கடந்த ஜூலை மாதம் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் அறிவித்தார்.

செப்டம்பர் 22 ஆம் திகதி, பாலஸ்தீன அங்கீகாரம் குறித்த ஐக்கிய நாடுகள் அவையின் பொதுக்கூட்டத்தை பிரான்ஸ் மற்றும் சவுதி அரேபியா இணைந்து நடத்துகிறது.

இந்த கூட்டத்தின் போது, நிபந்தனைகளுடன் பாலஸ்தீனத்தை அரசாக அங்கீகரிக்க அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் திட்டமிட்டுள்ளன. இந்நிலையில், பெல்ஜியமும் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க உள்ளதாக பெல்ஜியம் துணை பிரதமரும், வெளியுறவுத்துறை அமைச்சருமான மாக்சிம் பிரீவோட் அறிவித்துள்ளார்.

மேலும், இஸ்ரேலிய நிறுவனங்களுடன் பொதுகொள்முதல் கொள்கைகளை மறு ஆய்வு செய்தல், சாத்தியமான நீதித்துறை வழக்குகள், 2 இஸ்ரேலிய அமைச்சர்கள் மற்றும் ஹமாஸ் தலைவர்களுக்கு பெல்ஜியமில; **persona non grata** உள்ளிட்ட 12 உறுதியான தடைகள் இஸ்ரேல் மீது விதிகப்படும் என தெரிவித்துள்ளார்.

மேலும், காசாவில் பிடித்துவைக்கப்படடுள்ள கடைசி இஸ்ரேல் பணயக்கைதி விடுவிக்கப்பட்ட பின்னர், பாலஸ்தீனத்தை நிர்வகிப்பதில் ஹமாஸ் அமைப்பிற்கு எந்த பங்கும் இல்லை. பாலஸ்தீன அங்கீகாரம் நிர்வாக ரீதியில் முறைப்படுத்தப்படும் என தெரிவித்துள்ளார். (ஐ)



## தர்மலிங்கத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ள அவரது நினைவுத் தூபியில் இன்று காலை 7 மணியளவில் ஓய்வுபெற்ற தபால் அதிபர் முருகேசு சண்முகம் தலைமையில் இந்த நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது நினைவுத்தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன் "தமிழுணர்வும் ஈழத்தமிழர் கல்வி உரிமையும்" எனும் தலைப்பில் உரையாற்றினார்.

இந்த நினைவஞ்சலி நிகழ்வில் வி.தர்மலிங்கத்தின் மகனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

23 வருடங்கள் மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த விஸ்வநாதர் தர்மலிங்கம் 1985 ஆம் ஆண்டு செப்டெம்பர் 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவராகவும் 23 ஆண்டுகள் தொடர்ச்சியாக உடுவில், மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த விஸ்வநாதர் தர்மலிங்கம், 1985ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி மானிப்பாயில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்

## வடக்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

3 ஆண்டுகளில் இது 40 ஆயிரம் ஏக்கராக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விதை தேங்காய் மரக்கன்றையும் நட்டு, உற்பத்தி அலகைத் திறந்து வைத்தார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இளங்குமரன், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள பகுதியில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையால் நடத்தப்படும் தெங்கு தொடர்பான கண்காட்சியையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

## பதுளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அடையாளம் காண முடியாத அளவுக்கு எரிந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் யார் என அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

உயிரிழந்தவரின் சடலம் பதுளை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நீர் வீழ்ச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஊவா பரணகம அம்பகஸ்துவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இராணுவ வாகனத்துடன் மோதி கார் விபத்து

திருகோணமலை - கண்டி பிரதான வீதியின் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 13ம் கட்டை சந்தியில் இராணுவத்திற்கு சொந்தமான கெப் ரக வாகனமும் கார் ஒன்றும் மோதி செவ்வாய்க்கிழமை (02) விபத்துக்குள்ளானது.

தம்பலகாமம் 13ம் கட்டை சந்தி வளைவில் திருப்பிய இராணுவ கெப் ரக வாகனமும் திருகோணமலையில் இருந்து வந்த காரும் ஒன்றுடன் ஒன்று மோதியுள்ளதுடன் இவ் விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்(ஜ)

# நடிகர் விஜய்க்கு ஜனாதிபதி பதிலடி



இலங்கையின் இறையாண்மை எந்த வகையான வெளிப்புற அழுத்தத்தாலும் சமரசம் செய்யப்பட மாட்டாது என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

கச்சதீவுக்கு இன்று மாலை விஜயம் செய்வதற்கு முன்னதாக யாழ்ப்பாணம் - மயிலிட்டியில் உரையாற்றியபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் அரசாங்கத்தின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை ஜனாதிபதி உறுதியாக மீண்டும் வலியுறுத்தியதுடன், நாட்டின் கடற்றொழில் சமூகங்களுக்கு கச்சத்தீவின் மூலோபாய மற்றும் உணர்வுபூர்வமான முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார்.

"கச்சத்தீவு நமது மீன்பிடி சமூகத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. தீவு தொடர்பில் பெரிய பொது விவாதம் எழுந்துள்ளது, இன்று அங்கு கடற்றொழிலாளர்களை சந்திக்க விரும்புகிறேன்.

இலங்கையின் பொறுப்பு அதன் நிலப்பரப்பைத் தாண்டி கடல் எல்லைகள் மற்றும் வான்வெளியை உள்ளடக்கியது.

நமது தீவுகள், நமது கடல் நமது வானம் அல்லது நமது நிலம், அவை நமது மக்களுக்குச் சொந்தமானவை. எதிர்கால சந்ததியினருக்காக அவற்றைப் பாதுகாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்

எனவே, எந்த வகையான வெளிப்புற அழுத்தத்துக்கு நாங்கள் அடிப்பணியமாட்டோம்" என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நாட்டில் யுத்தமொன்று ஏற்படுவதற்கான சூழல் தற்போது இல்லை, எனவே, பாதுகாப்பு காரணங்களுக்காக கையகப்படுத்தப்பட்ட காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

"முன்னைய காலங்களில் கொழும்பில் ஒரு அரசாங்கம் உள்ளது, தமக்கு வேறொரு அரசாங்கம் வேண்டும் என வடக்கில் உள்ளவர்கள் கோரியிருந்தனர்.

தற்போது அனைவருக்குமான அரசாங்கமொன்று அமைய பெற்றுள்ளதால் அவ்வாறான கோரிக்கைகளுக்கு இனி இடமில்லை.

கடந்த காலங்களில் இருந்த இனவாதத்தை மையப்படுத்திய அரசியல் முறைமையை இந்த அரசாங்கம் இல்லாமல் செய்துள்ளது" எனவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தவெக இரண்டாவது மாநில மாநாடு மதுரையில் கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது. இந்த மாநாட்டில் பல்வேறு விஷயங்களைப் பேசிய தவெக தலைவர் விஜய், "தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்குத் தீர்வாக, கச்சத்தீவை மட்டும் மீட்டுக்கொடுங்கள்" என பிரதமர் நரேந்திர மோடிக்கு வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# கனேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கு- நாட்டை விட்டு தப்பி சென்றுள்ள இஷாரா செவ்வந்தியை கைது செய்ய சிறப்பு நடவடிக்கை!

பாதாள உலகக் குழு தலைவரான கனேமுல்ல சஞ்சீவ கொலை வழக்குடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக குற்றப் திணைக்களத்தின் திணைக்களத்திற்கு தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கொழும்பு குற்றப்பிரிவு இஷார செவ்வந்தியைக் கைது செய்ய சிறப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் சமீபத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் இந்த நாட்டிற்கு அழைத்து வரப்பட்ட கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட பாதாள உலகக் குழுவினரிடம் மேற்கொண்ட விசாரணையின் போதே இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது. கனேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சில நாட்களுக்குப் பின்னர் இஷாரா செவ்வந்தி துபாய்க்கு தப்பிச் சென்றதாக கெஹல்பத்தர பத்மே பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இதன்படி, தற்போது நடைபெற்று வரும் விசாரணைகளுக்கு மேலதிகமாக, கொழும்பு குற்றப்பிரிவு மேலும் விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாக தெஹிவிக்கப்பட்டுள்ளது.

# இரத்தினபுரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் பணிப்புறக்கணிப்பு!

இரத்தினபுரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இரத்தினபுரி போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று காலை 8 மணி முதல் நாளை காலை 8 மணி வரையான காலப்பகுதியில் பணிப்புறக்கணிப்பை முன்னெடுப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் நடவடிக்கை தொடர்பாக சுகாதார அமைச்சு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக முன்னர் இணங்கிய போதிலும், அதிகாரிகள் அதனை செயல்படுத்தத் தவறியுள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த பணிபுறக்கணிப்பு நடவடிக்கையின் போது அவசர மற்றும் உயிர்காக்கும் சிகிச்சைகள் வழமைபோல இடம்பெறும் என்பதுடன், ஏனைய நாளாந்த சேவைகள் அனைத்தும் பாதிக்கப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை அதிகாரிகள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காவிட்டால், எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

அதன் செயலாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்க, தங்கள் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஒரு வாய்ப்பை வழங்குமாறும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

# அடையாள அரசியல்.......

என்று சண்டை போட வைத்துவிட்டு குளிர்காய்கிறார்கள் முன்னேறிய வகுப்பினர். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால், மேல்தட்டு முதலாளிகள் வர்க்கம் தொழிலாளர்களாக இருக்கும் சாமானிய மக்களை ஒன்றிணைத்துப் போரிட விடாமல் தடுக்க சாதி, மதம், மொழி, பாலினம் போன்ற அடையாளங்களுக்குள் வேற்றுமை கற்பித்து தனித் தனியே பிரித்து வைத்திருக்கிறது. இதன் மூலம், வலதுசாரிகள் மக்கள் போராடுவதை விரும்பாதவர்கள் என்று புரிந்துகொள்ள முடிகிறது.

இப்படி இருக்கையில், சில நேரம் வலதுசாரிகளும் அடையாள அரசியலை ஆதரிப்பர். ஆனால், தீவிர வலதுசாரிகள் மிகத் தெளிவாக எல்லா மக்களையும் தோழமை நோக்கத்தோடு ஒன்றிணைந்து போராட விடாமல் எப்படி அடையாள அரசியல் செய்ய வைக்க வேண்டும் என்று தெரிந்து செயல்படுவர். உதாரணத்திற்கு, பால்புதுமையினர் உரிமைகளைக் கோரி தொடர்ந்து போராடி வருகிறார்கள். அவர்களை ஆதரித்து அவர்களோடு சேர்ந்து போராட நினைக்கும் பால்புதுமையினர் அல்லாதவர்களும் இங்கு பலர் உள்ளனர். அப்படித் தோழமையோடு போராடுபவர்களைப் பார்த்து, "நீ ஏன் அவங்களோட (பால்புதுமையினர்) சேர்ந்து போராட்டம்லாம் பண்ணுற பார்க்குறவங்க உன்னையும் தன்பால் ஈர்ப்பாளர்னு தப்பா நினைச்சிடுவாங்க. அப்புறம் அவங்க படுற கஷ்டம் எல்லாம் நீயும் படுவ. அவங்க மட்டும் அவர்களுக்காகப் போராடிக்கட்டும். நீ அமைதியா இரு" என்று கூறி பயமுறுத்துவார்கள். இது போன்ற பயமுறுத்தும் கதையாடல்கள் தோழமை உணர்வோடு குரல் கொடுக்க நினைக்கும் மக்களை மீண்டும் ஒன்றிணைய விடாமல் தனித் தனியாகவே இருக்க வைக்கிறது.

அவரவர் பிரச்னைகளை அவரவரே போராடித் தீர்த்துக் கொள்ளட்டும் என்று இருந்தால் சமூக மாற்றம் நிகழவே நிகழாது. சுரண்டல் இல்லாத சமுதாயத்தைப் படைக்க அனைவரும் அவரவர் அடையாளங்கள் மத்தியில் கற்பிக்கப்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து அனைத்து மக்களும் சமம்தான் என்கிற எண்ணத்தோடும் தோழமை உணர்வோடும் ஒன்று சேர்ந்து போராடுவதே தீர்வாகும். மனிதனாக ஒன்றிணைவோம் வாரீர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.09.2025 வெளியிடப்பெற்றது.